## வி.ஏ.ஓ தேர்வுக்கு தயார் செய்வது எப்படி?

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் (TNPSC)வெளியிடப்பட்டுள்ள எதிர்காலத்தில் நடைபெற உள்ள தேர்விற்கான அட்டவணையில் (Annual Planner) ஜூன் மாதம் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான (வி.ஏ.ஓ) எழுத்து தேர்வு நடைபெறும் என கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பணிபுரியும் வாய்ப்பு, தமிழ் மொழியிலேயே தேர்வு மற்ற தேர்வுகளில் இருப்பது போன்று கடினமான கணக்கு கேள்விகள் மற்றும் மிரட்டும் ஆங்கில கேள்விகள் எதுவும் இல்லை என்பது வி.ஏ.ஓ உள்ளிட்ட தேர்வுகளின் சிறப்புகளில் குறிப்பிடத்தக்கது. எனவே பயம், தயக்கம் போன்றவற்றை விட்டுவிட்டு வெற்றி என்ற இலக்கை மட்டும் குறிவைத்து முழுமனதுடன் முயற்சி செய்தால் இந்த தேர்வில் ஜெயிப்பது நிஜம்.

ஆனாலும் இலட்சக்கணக்கானோர் போட்டி போடும் இந்த தேர்வில் நம்மால் எப்படி வெற்றி பெற முடியும் என்று சிலர் நினைக்கலாம். சிலருக்கு ஆர்வம் இருக்கலாம். ஆனால் தேர்வு முறை குறித்த தகவல்கள் தெரியாமல் இருக்கலாம். என்ன பாடங்கள் படிக்க வேண்டும், எப்படி படிக்க வேண்டும்? என்ற தடுமாற்றங்கள் காணப்படலாம்.

அவர்களுக்காகவே அறிவுக்கடல் பதிப்பகத்தின் சார்பாக இந்த மாதிரி தேர்வு வெளியிடப்படுகிறது.

## கிராம நிர்வாக அலுவலர் தேர்விற்கான பாடத்திட்டம்

| | | |
|---|---|---|
| 1. பொது அறிவு | - | 95 வினாக்கள் |
| [பொது அறிவு 75 வினாக்கள் + அறிவுக்கூர்மை 20 வினாக்கள்] | | |
| 2. பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம் | - | 80 வினாக்கள் |
| 3. அடிப்படை கிராம நிர்வாகம் | - | 25 வினாக்கள் |
| **மொத்த மதிப்பெண்கள்** | - | 300 |

இத்தேர்வுக்கான நேரம் 3 மணி நேரமாகும். பத்தாம் வகுப்பு தரத்தில் வினாக்கள் மேற்கண்ட பாடத்திட்டதில் அமைந்துள்ள எண்ணிக்கையின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

**அலகு – I பொது அறிவியல் (General Science)**

1. இயற்பியல் (Physics), 2. வேதியியல் (Chemistry), 3. தாவரவியல் (Botany) 4.விலங்கியல் (Zoology)

**அலகு – II பொது அறிவு மற்றும் நடப்பு நிகழ்வுகள் (General Knowledge and Current Affairs)**

**அலகு – III புவியியல் (Geography)**

**அலகு – IV இந்திய வரலாறு மற்றும் பண்பாடு**

1. பழங்கால வரலாறு (Ancient India)
2. இடைக்கால வரலாறு (Geographical History)
3. தற்கால வரலாறு (Modern India)
4. இந்தியப் பண்பாடு (Indian Culture)

**அலகு – V இந்திய அரசியலமைப்பு (Indian Polity)**

**அலகு – VI பொருளாதாரம் (Economy)**

1. இந்தியப் பொருளாதாரம் (Indian Economy)
2. தமிழ்நாட்டுப் பொருளாதாரம் (Tamil Nadu Economy)

**அலகு – VII இந்திய தேசிய இயக்கம் (Indian National Movement)**

1. 1857 பெருங்கிளர்ச்சி (1857 Revolt)
2. இந்திய தேசிய காங்கிரஸ் (Indian National Congress)
3. தேசிய தலைவர்கள் எழுச்சி (Emergence of National Leaders)
4. சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு (Role of Tamil Nadu in Freedom Struggle)

**அலகு – VIII அறிவுக்கூர்மை, காரணமறிதல் மற்றும் கணிப்பொறி அறிவு (Mental Ability Reasonning and Computer Awareness)**

1. புள்ளியியல் (Statistics)
2. அறிவுக்கூர்மை – சதவீதம், மீ.சி.ம., மீ.பெ.வ., விகிதம் மற்றும் வீதம், தனிவட்டி, கூட்டுவட்டி, நேரம் மற்றும் வேலை, அளவியல்
3. தர்க்க முறையில் காரணமறிதல் (Logical Reasoning)

கனசதுரம், பகடை சம்பந்தமான கேள்விகள், திசை அறிதல், (Coding and Decoding) எண் வரிசைகள், எழுத்து மற்றும் எண் சம்பந்தமான கேள்விகள், இரத்த உறவு தொடர்பான கேள்விகள், கொடுக்கப்பட்ட படத்தில் விடுபட்ட எண்ணைக் கண்டறிதல் (Visual Reasoning)

## பொதுத்தமிழ்

பொதுத்தமிழில் கேட்கப்படும் 100 வினாக்களுக்கான பாடப்பகுதிகள் பின்வருமாறு

**பகுதி - அ** இலக்கணம் - இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.
**பகுதி - ஆ** இலக்கியம் – இப்பகுதியில் 10 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.
**பகுதி - இ** தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும் – இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

இத்தேர்வின் பாடத்திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள அடிப்படை கிராம நிர்வாகம் என்ற பாடத்தலைப்பிலிருந்து 25 வினாக்கள் கேட்கப்படும்.

## படிக்க வேண்டிய புத்தகங்கள்

**1. பொது அறிவு**

1. 6 முதல் 10-ஆம் வகுப்பு வரை உள்ள சமச்சீர் பாடப்புத்தங்கள் [அறிவியல், சமூக அறிவியல், கணிதம் போன்ற பாடப்புத்தகங்கள்]
2. பொது அறிவு களஞ்சியம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள்
3. தினமும் செய்தித்தாள் படிக்கவும்.

**2. திறனறித்தேர்வு (Aptitude & Mental Ability)**

1. 8, 9, $10^{th}$ Standard Mathematics (Samacheer)- புள்ளியியல் பாடம் மட்டும்.
2. பயிற்சி நிறுவன கையேடுகள்.

**3. பொதுத்தமிழ்**

1. தமிழ் இலக்கணம் (6 முதல் 10ஆம் வகுப்பு வரையிலான சமச்சீர் பாடத்திட்டம்)
2. தமிழ் பாடம் – (6 முதல் 10ஆம் வகுப்பு வரையிலான சமச்சீர் பாடத்திட்டம்)
3. தமிழ் இலக்கிய வரலாறு புத்தகங்கள்
4. பொதுத்தமிழ்க் களஞ்சிய தகவல் புத்தகங்கள்